# B முழு ஆண்டுப் பொதுத் தேர்வு - 2024

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி தமிழ் மதிப்பெண்கள்: 100

பகுதி - I

பிரிவு - I

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். 15×1=15

1) அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு ______

அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

2) 'யா' மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

3) முண்டி மோதும் துணிவே இன்பம் - இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

4) சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

அ) வருக்கை-இருக்கை ஆ) புள்-தாவரம்

இ) அள்ளல் - சேறு ஈ) மடிவு - தொடக்கம்

5) ஐந்து சால்புகளில் இரண்டு ______

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்

இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

6) மரவேர் என்பது ______ புணர்ச்சி

அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

7) மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசுமரம் இ) வளம் ஈ) பெரிய

8) தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் ______

அ) முத்துலட்சுமி ஆ) ரமாபாய் இ) இராமாமிர்தம் ஈ) சோபியா

9) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் ______

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

10) 'ஞானம்' என்பதன் பொருள் யாது?

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

11) வண்ணதாசனுக்கு சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல் ______

அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்

இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

Scanned with CamScanner

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே

12) எதனை ஆக்க வேண்டும் என்று பாடல்வரி கூறுகிறது?
அ) வெகுளி ஆ) அறம் இ) ஞானம் ஈ) விரதம்

13) 'வெகுளி' என்பதன் பொருள் யாது?
அ) அறிவு ஆ) நற்செயல் இ) சினம் ஈ) நன்னெறி

14) அடியெதுகையை எழுது
அ) ஆக்குவது - அறத்தை ஆ) ஆக்குவது - ஆக்குக
இ) ஆக்குவது - போக்குவது ஈ) போக்குவது - போக்குக

15) இப்பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் ________
அ) சீவக சிந்தாமணி ஆ) யசோதர காவியம்
இ) உதயண குமார காவியம் ஈ) பெரியபுராணம்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:-**
**வினா எண்.21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4×2=8**

16) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
17) விடைக்கேற்ற வினா அமைக்க
அ) இந்திய தேசிய இராணுவம் இந்திய விடுதலைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு
ஆ) ஏறுதழுவுதல் முல்லை நிலத்து மக்களின் அடையாளமாகும்.
18) நடுகல் என்றால் என்ன?
19) இணைய வழியில் இயங்கும் மின்னனு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
20) நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
21) "அடுக்கிய" - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:-** **5×2=10**

22) பொருத்தமான பெயரடைகளை எழுதுக.
அ) எல்லோருக்கும் ________ வணக்கம். (பெரிய/இனிய)
ஆ) அவன் ________ நண்பனாக இருக்கிறான். (நல்ல/பெரிய)
23) தொடர் தரும் பொருளைக் கூறுக:
சின்னக்கொடி, சின்னகொடி
24) கலைச்சொல் தருக: Download, Melody
25) ஆழ்ந்த = பகுபத உறுப்பிலக்கணம் தருக.
26) மாமாவின் வருகைக்கு வீடே மகிழ்கிறது - எவ்வகை ஆகுபெயர்?

www.Padasalai.Net
Scanned with CamScanner
Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

27) அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

28) பிழைநீக்கி எழுதுக
நல்ல் தமிழுக்கு எழுதுவோம்

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:- 2×3=6

29) சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

30) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:-

'குளித்தல்' என்ற சொல்லுக்கு 'உடம்பினைத் தூய்மை செய்தல்' அல்லது 'அழுக்கு நீக்குதல்' என்பதல்ல பொருள். சூரிய வெப்பத்தாலும், உடல் உழைப்பாலும் வெப்பமடைந்த உடலைக் குளிர வைத்தல் என்பதே அதன் பொருளாகும். குளிர்த்தல் என்பதே குளித்தல் என்று ஆயிற்று. குள்ளக் குளிரக் குடைந்து நீராடி என்கிறார் ஆண்டாள். சிற்றிலக்கியமாகிய பிள்ளைத்தமிழில் நீராடல் பருவம் என்று ஒரு பருவம் உண்டு.

அ) குளித்தல் - சரியா? குளிர்த்தல் - சரியா?

ஆ) நீராடல் பருவம் - இடம் பெறும் இலக்கியம் எது?

இ) குளித்தல் - என்ற சொல்லின் சரியான பொருள் எது?

31) முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 2×3=6

வினா எண். 34-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

32) ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்க தேவர் பாடியுள்ளார்?

33) பழங்களை விடவும் நசுங்கிப் போனது - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34) அடிபிறழாமல் எழுது.

அ) காடெல்லாம் கழைக் கரும்பு ...... எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்

(அல்லது)

ஆ) பூவாது காய்க்கும் .... எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலை எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6

35) உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

36) இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக

37) பண்பாகுபெயர், தொழிலாகு பெயர் விளக்குக

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:- 5×5=25

38) அ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

(அல்லது)

ஆ) 'தூது அனுப்பத் தமிழே சிறந்தது' தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

Scanned with CamScanner

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com




39) அ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின், 'கால்முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக

40) படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.



41) பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

அ) ________ நுதல் (வாள், தவ)

ஆ) ________ விடுதும் (உறு, கடி)

இ) ________ மனை (கடி, தட)

ஈ) ________ பெரும் பொதுக்கூட்டம் (கடி, மா)

உ) ________ சிறந்தது (சால, மழ)

42) அ) மொழிபெயர்க்க

அ) Love your food

ஆ) Thinking is great

இ) Walk like a bull

(அல்லது)

ஆ) சமூகத்திற்கு உனது பணிகள்... ஐந்தினை எழுதுக. (எ.கா) குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடுவேன்.....

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 3×8=24

43) அ) மொழியிலும், இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக

(அல்லது)

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

44) அ) தாய்மைக்கு வறட்சி இல்லை என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக. (அல்லது)

ஆ) மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக் கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா. முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்தியை எழுதுக.

45) அ) "எனது பயணம்" - என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக. (அல்லது)

ஆ) "சாலை பாதுகாப்பு" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

********

Scanned with CamScanner

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com